முதன்மை மாவட்ட நீதிமன்றம், தஞ்சாவூர்

OS 40/2023

வாதி தரப்பு 1 வது சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு திரு.A.அலாவூதின், கிரேடு -1 பெஞ்ச் கிளார்க் என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வடிவழகன் | வயது | : | 58 |
| தந்தை பெயர் | : | கோவிந்தராஜ் | தாலுக்கா | : | தஞ்சாவூர் |
| கிராமம் | : | தஞ்சாவூர் | தொழில் | : | பேராசிரியர் |

நாள் : 27-10-2025

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1) நான் கல்லூரியில் பேராசிரியராக இருந்து தற்போது ஓய்வு பெற்று உள்ளேன். 2020 ம் ஆண்டு ஓய்வு பெற்றேன். சுயநிதி கல்லூரியில் பணிபுரிந்தேன்.

2) எனது மனைவி அரசு நடுநிலை பள்ளியின் தலைமை ஆசிரியராக உள்ளார்.

3) எனக்கு ஸ்ரீ சாய் நிதிநிறுவனம் தெரியும். அந்த நிறுவனம் தஞ்சாவூர் மெடிக்கல் காலேஜ் சாலையில் தற்போதும் இயங்கி வருகிறது.

3) அந்த நிறுவனத்தின் பங்குதாரர்கள் கார்த்திகேயன் மற்றும் செல்வம் ஆவார்கள். நான் ஆலோசராக உள்ளேன். கடன் கேட்டு வரும் வாடிக்கையாளர்களுக்கும் ஸ்ரீ சாய் நிறுவனத்திற்கும் இடையே கடன் ஏற்பாடு செய்து கொடுக்கும் ஆலோசராக உள்ளேன்.

4) பிரதிவாதி மேற்படி ஸ்ரீ சாய் நிதி நிறுவனத்தில் கடன் கேட்டு வாடிக்கையாளராக வந்தார் என்றால் தவறு. அவர் என் நண்பர் என்ற முறையில் கடன் கேட்டு வந்தார்.

5) தற்போதும் நான் ஸ்ரீ சாய் நிறுவனத்தில் ஆலோசகராக இருந்து வருகிறேன்.

6) பிரதிவாதிக்கு ஸ்ரீசாய் நிறுவனத்திடம் கடன் பெற்று திருப்பிசெலுத்தி வந்தவிபரம் எனக்கு தெரியாது.

7) பிரதிவாதிக்கு நான் ரூ-12லட்சம் ஒரே தவணையில் ரொக்கமாக கொடுத்திர்களா அல்லது பல தவணைகளில் ரொக்கமாக கொடுத்திர்களா என்ற விபரத்தை பிராது மற்றும் பிரமான

வாக்குமூலத்திலும் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்லி உள்ளேன்.

8)ரூ-12 லட்சம் கடன் கொடுப்பதற்கு எனக்கு வசதி இருக்கிறது என்பதை காட்டக்கூடிய ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

9) வா.சா.ஆ.1ல் முற்பாதியில் உள்ள வாசகங்கள் எழுதப்பட்ட பேனாவின் மை ஒரு விதமாகவும் பிற்பாதியில் உள்ள பிரதிவாதி மற்றும் சாட்சிகளின் கையொப்பம் போடப்பட்ட பேனாவின் மை ஒரு விதமாகவும் இருக்கிறது என்றால் அதை நான் மறுக்கிறேன்.

10) நான் பிரதிவாதிக்கு தொகை கொடுத்தாக சொல்லப்படும் சமயத்தில் அந்த இடத்தில் யார் யார் இருந்தார்கள் என்ற விபரத்தை என் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லி உள்ளேனா என்றால் சொல்லவில்லை.

11) என் மகன் பெயர் விக்னேஷ். அவர் அமெரிக்கன் கம்பனியில் மென் பொறியாளராக உள்ளார். என் மகனுக்கும் பிரதிவாதிக்கும் எந்தவித வரவு செலவும் உண்டா என்றால் எனக்கு தெரிந்து இல்லை. என் மகன் வெளிநாட்டில் பணிபுரிய வில்லை. பெங்களூரில் உள்ள அமெரிக்கன் கம்பனியில் உள்ள வேலையை தஞ்சாவூரில் உள்ள வீட்டில் இருந்து செய்கிறார்.

12) பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் உள்ள விபரங்களை என் வழக்கறிஞர் மூலமாக தெரிந்துகொண்டேன்.

13) பிரதிவாதிக்கு தஞ்சாவூர் நீலகிரி தெற்குதோட்டத்தில் ஒரு மனை உள்ளது என்றால் உள்ளது. மேற்படி மனையை இந்த வழக்கின் தீர்ப்புக்கு முன்பே ஜப்தி செய்யவேண்டும் என்று நான் மனு போட்டேன் என்றால் சரிதான். அந்த மனுவில் 17.3.2023 தேதியிட்ட வில்லங்க சான்றிதழை அந்த சொத்து சம்பந்தமாக தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான். அந்த வில்லங்க சான்றிதழை பகுதியாக நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதி மேற்படி சொத்து குறித்து 1.2.2023ம் தேதியில் நடராஜன் என்பவருக்கு ஒரு பொது அதிகார பத்திரம் எழுதிகொடுத்திருந்தார் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. நடராஜன் 2.2.2023 அன்று மேற்படி சொத்தை செந்திலா என்பவருக்கு ஒரு கிரயம் ஒப்பந்தம் போட்டிருந்தார் என்றால் எனக்கு தெரியாது. நான் இந்த தாவாவை 15.2.2023 அன்று தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஞாபகம் இல்லை. என்னிடம் காட்டப்படும் வழக்கரையில் 15.2.2023 அன்று தாக்கல் செய்ததாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

14) தாவா சொத்தை நான் பிரதிவாதியிடம் இருந்து அபகரிக்கவேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் பிரதிவாதி நடராஜனுக்கு பொது அதிகாரம் கொடுத்து அந்த நடராஜன் செந்திலா என்பவருக்கு கிரய ஒப்பந்தம் போட்டதை தெரிந்து கொண்டு இந்த வழக்கில் வா.சா.ஆ.1 ஆவணத்தை தயார் செய்து இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

15) வா.சா.ஆ.1ல் சாட்சி கையொப்பம் போட்டுள்ளவர்கள் எனக்கு உறவினர்கள் கிடையாது என்றால் சரிதான். 2வது சாட்சி கையொப்பம் போட்டவர் ஸ்ரீசாய் நிதிநிறுவனத்தில் பணியாளராக உள்ளார் என்றால் இல்லை. அவர் விவசாயம் செய்கிறார். அவரை எங்கள் தரப்பு சாட்சியாக விசாரிக்க போகிறிர்களா என்றால் அதை என் வழக்கறிஞரிடம் தான் கேட்கவேண்டும்.

16) நான் ஸ்ரீ சாய் நிதி நிறுவனத்தில் பங்குதாரர் என்றும் பிரதிவாதி ஸ்ரீ சாய் நிதி நிறுவனத்தில் கடந்த 9.6.2021ம் தேதியில் ரூ-2,15,000/ ம் கடன் பெற்றிருந்தார் என்றும் அதை வட்டியுடன் என்னுடைய அறிவுறுத்தலின் பேரில் என் மகன் விக்னேஷ் வங்கி கணக்கில் செலுத்தி விட்டார் என்றும் பிரதி வாதி கடன் பெற்றபோது அவரிடம் இருந்து பிணையாக பெற்ற காசோலையில் கண்ட பிரதிவாதி கையொப்பத்தை மோசடியாக வா.சா.ஆ.1ல் போட்டு நானும் சாட்சிகளும் தயார் செய்தோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1ல் காணப்படும் கையொப்பம் பிரதிவாதியின் கையொப்பம் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தின்அடிப்படையில் பிரதிவாதி எந்த வித கடன் தொகையும் பெற்றுகொண்டு எழுதி கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

17) அதனால் இந்த வழக்கை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

மறு விசாரணை

இல்லை.

/உண்மை நகல்/

ஒம்/P.வேல்முருகன்

முதன்மை மாவட்ட நீதிபதி

தஞ்சாவூர்